# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 31 வியாழக்கிழமை 17.10.2024 கதிர் 390




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அனுபவசாலிகளைத் தெரிவு செய்யுங்கள்

## அனுபவம் இல்லாதவர்களினால் நாடாளுமன்றத்தை நிர்வகிக்க முடியாது என்கிறார் ரணில் விக்கிரமசிங்க



நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் முன்னோக்கி நகர்வதற்கும் தன்னுடன் இணைந்து செயற்பட்ட அனுபவசாலிகள் நாடாளுமன்றத்திற்கு செல்வது அவசியம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களிற்கான விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார். உங்களது எதிர்காலத்தை புதிய நாடாளுமன்றம் தீர்மானிக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"நான் ஜனாதிபதி தேர்தலில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டேன். சிறிலங்கா பொது ஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் புதிய கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து எனக்கு ஆதரவளித்தன. இவர்கள் அனைவரும் எனது தலைமையின் கீழ் செயற்பட்டனர்" என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 2➤

# இளையோரை நாடாளுமன்றுக்கு தமிழ் மக்கள் அனுப்ப வேண்டும்

## வலியுறுத்துகின்றார் மணிவண்ணன்




கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் இருந்தவர்களை புறந்தள்ளி கறைபடியா கரங்களுடைய இளையோரை நாடாளுமன்றுக்கு அனுப்ப தமிழ் மக்கள் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் தகுதியான வேட்பாளர்களுடன் களமிறங்கியுள்ளோம். இந்த தேர்தல் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தியல் காணப்படுகிறது. தென்னிலங்கை மக்கள் பழைய ஆட்சியாளர்களை துடைத்தெறிந்து, ஊழலற்ற, நேர்மையான அரசியல்வாதிகளை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளார்கள்.

அதனால், தென்னிலங்கையில் இருக்கக்கூடிய பல மூத்த அரசியல்வாதிகள் தேர்தலில் இருந்து விலகியுள்ளனர். ஆனால், வடக்கு அரசியல்வாதிகள் தொடர்ந்து போட்டியிட வேண்டும் 2➤



# திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம்

யாழ். தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் நேற்று மாலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டமானது நேற்று புதன்கிழமை மாலை மீண்டும் ஆரம்பமாகியது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த போராட்டமானது, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக இளைஞரிடம் 80 லட்சம் மோசடி

## கைதானவர் விளக்கமறியலில்

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 80 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞரை வெளிநாடு அனுப்பி வைப்பதாகக் கூறி 80 இலட்ச ரூபாவைப் பெற்றுக்கொண்டு, இளைஞரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காத நிலையில், மேற்படி இளைஞர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த 2➤

# அவதூறு செய்தி குறித்து அங்கஜன் முறைப்பாடு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது பெயருடன் வெளியிடப்பட்ட அவதூறுச் செய்தி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொலிஸ் சைபர் கிரைம் பிரிவு ஆகியவற்றில் முறைப்பாடுகளைப் பதிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 14ஆம் திகதி இந்தியாவின் மஹாராஷ்டிரா வங்கிக் கிளை தலைவரை இளைஞன் ஒருவர் தாக்கிய வீடியோ ஒன்று அங்கஜன் அரச உத்தியோகத்தரை தாக்கியதாக இணையதளங்களில் பரவலாக பரவி வரும் நிலையிலேயே இது தொடர்பாக அங்கஜன் 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## வெளிநாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார், பணத்தைப் பெற்றுக்கொண்டவரைக் கைது செய்து, விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்

## இளையோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற பேரார்வத்துடன் காணப்படுகின்றனர்.

வடக்கில்எமது கட்சித்தலைவர்சி.வி.விக்னேஸ்வரன் மாத்திரம் தான் தேர்தலில் இருந்து விலகி இளையோரிடம் கையளித்துள்ளார். மற்றையவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றில் இருந்தும் மக்களை எதுவும் செய்யாத நிலையிலும் தொடர்ந்தும் ஆசைப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் இருந்தவர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும். வடக்கிலும் ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும். அதனால் தான் கற்றறிந்த இளையோரை நாங்கள் களமிறக்கியுள்ளோம். தமிழ் மக்கள் எங்களுக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் தர வேண்டும்.

நாங்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வீணடிக்காமல் செயற்படுவோம். தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் ஆளுமைமிக்க ஆற்றல் உள்ளவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் ஒரு கண் எனில் நீடித்த பொருளாதாரமும் மற்றைய கண்ணாக இருக்க வேண்டும். இரண்டு கண்களும் தமிழ் மக்களுக்கு தேவையானது. நாம் இரண்டையும் சேர்த்தே முன்னெடுத்துச் செல்வோம்" என்றும் மணிவண்ணன் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இவர்கள் அனைவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒன்றிணைகின்றனர். புதிய ஜனநாயக கட்சியாக போட்டியிடுகின்றனர். எனது தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்" என்றும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் உரிய அனுபவம் உள்ளவர்கள். இவர்கள் கடந்த காலங்களில் தங்கள் பணியை ஒழுங்கான முறையில் முன்னெடுத்துள்ளனர். கடந்த இரண்டு வருட காலமாக என்னுடன் இணைந்து செயற்பட்டவர்களிற்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கான அனுபவம் உள்ளது.

ஆகவே, அவர்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறவேண்டும். அனுபவம் இன்றி நாடாளுமன்றத்தை நிர்வகிக்க முடியாது. நீங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் தோல்வியடைவீர்கள்" என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## அவதூறு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராமநாதன் தெளிவூட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

வங்கிக் கிளை தலைவர் தாக்கப்பட்ட சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றது. ஸ்வாபிமானி ஷேத்காரி சங்கத்தின் இளைஞர் பிரிவுத் தலைவரே வங்கி கிளைத் தலைவரை தாக்கியுள்ளார். ஆனால் இணையத்தளங்களில் அங்கஜன் எம்.பி அரச உத்தியோகத்தரை தாக்கினார் என பொய்யாக பகிரப்படுகின்றது.

தோல்வியின் பயத்தில் உள்ளோரே இவ்வாறு தவறான தகவல்களைப் பரப்பி வருவதாக மேலும் அங்கஜன் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் கலந்துரையாடல்

நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது குறித்து தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெடுக்கப்பட வேண்டிய பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக அங்கத்தவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டதுடன், மாவட்ட மற்றும் பிரதேச கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல்ரத்நாயக்க கலந்துகொண்டதுடன், வன்னி மாவட்ட வேட்பாளர்கள், உறுப்பினர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# ஆணைக்குழுவுக்கு 3,045 முறைப்பாடுகள்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை 3,045 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றுள் 811 முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதுடன் சுற்றிவளைப்பில் 67 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 20 பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குகின்றனர்.

கிடைத்த 620 முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் சட்டத்திற்கு புறம்பான வகையில் அமைந்துள்ளதால் அவை குறித்த நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

# அற்றோனி தத்துவத்தை பயன்படுத்தி மோசடி

## கைதான இருவர் பிணையில் விடுதலை

அற்றோனித் தத்துவத்தை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடா நாட்டில் வசிக்கும் நபர் ஒருவர் மானிப்பாய் பகுதியில் உள்ள தனது ஆதனங்கள் சிலவற்றுக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்தவருக்கு தனது அற்றோனித் தத்துவத்தை வழங்கி இருந்தார்.

குறித்த நபர் தனக்கு அற்றோனித் தத்துவத்தில் வழங்கப்படாத அதிகாரத்தை பயன்படுத்தி மேலும் சில ஆதனங்களை மோசடியாக உரிம மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் கனடாவை சேர்ந்த நபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்று புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் காரைதீவில் கைது



(சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரை நேற்று புதன்கிழமை மாலை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேக சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரும் சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய நபரொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 510 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 770 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர்களை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அரச இரகசிய சட்டத்தில் என்னை கைது செய்ய அரசாங்கம் முயற்சி

## உதய கம்மன்பில பரபரப்புத் தகவல்



அரச இரகசிய சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தன்னை கைது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக பிவித்துறு ஹெல உறுமய தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தன்னிடம் இருப்பதாக கூறியுள்ளதால், அதனை தான் வெளியிடுவதற்கு முன்னர் தன்னை கைது செய்வதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று புதன் கிழமை பிவித்துறு ஹெல உறுமய கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தன்னிடம் இருப்பதாக கூறியுள்ளதால், நான் அந்த அறிக்கையை வெளியிட முன்னர் அரச இரகசிய மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தன்னை கைது செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக தனக்கு தகவல்கள் கிடைத் துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு அரச உயர் மட்டத்தில் தன்னை கைது செய்வதது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது என்றும் தெரிவித்த கம்மன்பில, ஆனால் எந்தவித அச்சுறுத்தலுக்கும் தான் அஞ்சப் போவதில்லை என்றும், மக்களுக்கு உண்மைகளை அறிந்துகொள்வதற்காக நான் செயற்படப்போவதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான இரண்டு விசாரணை அறிக்கைகளையும் எதிர் வரும் திங்கட்கிழமை வெளியிடப்போவதாகவும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும்

## எரான் விக்கிரமரட்ன தெரிவிப்பு



"முன்னாள் ஜனாதிபதிகள் மீண்டும் அரசியலில் இருப்பது நாட்டுக்கு பொருத்தமானது அல்ல" என்றும், "அவர்கள் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே நல்லது" என்றும் ஐக்கிய மக்கள் சக்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை விசேட உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எரான் விக்கிரமரட்ன மேலும் கூறுகையில், "முன்னாள் ஜனாதிபதிகள் ஓய்வு பெற்று வீட்டுக்கு போய்விட வேண்டும். இலங்கையில் மட்டுமே முன்னாள் ஜனாதிபதிகள் மீண்டும் அரசியலில் இருப்பதுடன் நாடாளுமன்றத்திற்கும் வருகின்றனர்" என்றும் தெரிவித்தார்.

"நாட்டின் உயர் அதிகாரத்துடனான பதவியில் இருப்பவர்கள் மீண்டும் அரசியலில் தலையிடுவது நாட்டுக்குப் பொருத்தமானது அல்ல" என்று தெரிவித்த எரான் விக்கிரமரட்ன, "எவராவது நிறுவனமொன்றில் உயர் பதவியில் இருந்துவிட்டு மீண்டும் கீழ்நிலை பதவியில் இருப்பார்களா? அதன்படிதான் அரசியலிலும் இருக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அரசியலில் இருக்க மாட்டோம் என்று கூறியவர்கள் மீண்டும் நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளதாக கூறுவது எதற்காக என்று தெரியவில்லை. பாட்டு பாடப் போகின்றாரா? என்றும் தெரியவில்லை" என்றும் எரான் விக்கிரமரட்ன மேலும் தெரிவித்தார்.

# "புதிய கடன்கள் எதனையும் அரசாங்கம் பெறவில்லை"

அமைச்சுகளின் செலவினங்களைச் சமாளிக்கவும், திறைசேரி பத்திரங்கள் மற்றும் பிணைமுறைகளை மீளச்செலுத்துவதற்கும் உள்ளூர் நிதிச் சந்தையில் இருந்து நிதி சேகரிக்கப்படுகிறதே தவிர புதிய கடன்களை பெற மாட்டோம் என ஜனாதிபதியின் பொருளாதார மற்றும் நிதி விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க பதவியேற்றதன் பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் அதிகரித்துள்ளதாக சிலர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"அரசாங்கத்திற்கு அதன் அன்றாட அத்தியாவசியச் செலவுகளைச் சமாளிக்கவும், சேவைகளை இயக்கவும் நிதி தேவைப படுகிறது. ஒவ்வொரு வாரமும், மத்திய வங்கி திறைசேரி பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகளை விற்பனை செய்வதன் ஊடாக நிதியை திரட்டுகிறது. உரிய திகதியில் திருப்பிச் செலுத்தல்களும் இடம்பெறுகிறது. இது ஒரு சாதாரண செயல்முறை.

அரசாங்கம் புதிதாக கடன்களை பெறவில்லை. வழக்கம் போல், நிதி சேகரிப்பு மட்டுமே நடைபெறுகிறது. இதனை தவிர, உள்ளூர் நிதிச் சந்தையில் சிறப்பு, விசித்திரமான அல்லது அசாதாரணமான நிதி சேகரிப்பு எதுவும் செய்யப்பட வில்லை.

ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ள படி நாங்கள் உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் கடன்களை பெறவில்லை. நிதிச் சந்தையை ஸ்திரப்படுத்துவது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கோரிக்கை விடுக்கப்பட்ட சில நிதிகள் திறைசேரிக்கு வருகின்றன." என்றார்.



# அதிகரிக்கும் துஷ்பிரயோகத்திலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது எவ்வாறு?

**அனைத்து சிறுவர்களுக்கும் உயிர் வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும் இபோதுமான கவனிப்பை பெறுவதற்கும், பாதுகாப்பான சூழலில் வளர்வதற்கும், கல்வியைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. அதனை சமூகம் தனது கடப்பாடாக தங்களது பொறுப்பாக ஏற்கும் மனநிலையை கொண்டு வர வேண்டும்**

**சொக்கலிங்கம் லோஜினி**
*மூன்றாம் வருடம்*
*ஊடக கற்கைகள் துறை*
*யாழ் பல்கலைக்கழகம்.*



இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினையாக சிறுவர் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அது நாட்டின் சுபீட்சத்தையும், சிறுவர்களின் எதிர்காலத்தையும் நாசமாக்கி விடுமோ என்ற அளவுக்கு அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் அநேகமானவை பெற்றோர், வளர்ப்புப் பெற்றோர், பராமரிப்பாளர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், தொழில் வழங்குனர்கள், வயோதிபர்கள்மற்றும்அயலவர்கள்போன்றவர்களாலேயே மேற்கொள்ப்பட்டு வருகின்றன.

இவர்களால் சிறுவர்கள் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மற்றும் பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டு பல்வேறு உடல் மற்றும் உளத் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவற்றின் தாக்கங்கள் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், உள விருத்தியிலும் மற்றும் ஆளுமை விருத்தியிலும் பல்வேறு பாதிப்பைச் செலுத்தியுள்ளன.

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சந்ததியினரின் அறிவுசார் வளர்ச்சியிலும் ஆளுமையின் மீதும் தங்கிருக்கின்றது. இதனால், குழந்தைகளின், வளர்ச்சியும் அவர்களது சுதந்திரமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தவகையில், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான முற்தடுப்பானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதனை சிறுவர் துஷ்பிரயோகம் நிகழ்வதற்குச் சாதகமான நிலமைகளை நீக்குவதன் மூலம் அடைய முடியும். மேலும், பாதிப்படைந்த சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அவர்களையும் ஏனைய சாதாரண சிறுவர்களைப் போல வளரச் செய்து சமூகத்தில் பயனுள்ள பிரஜைகளாக்க முடியும்.

அனுராதபுரம் மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவது குறித்து அனுராதபுரம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்தப் பிரச்சனை அனுராதபுரம் மாவட்டத்திற்கு மாத்திரமானதல்ல இலங்கை முழுவதற்குமான ஒரு பாரிய சிக்கல் விவகாரமாகும்.

சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் 2021இல் 11,200 சம்பவங்களும் 2023இல் முதல் 10 மாதங்களில் 8000 சம்பவங்களும் முறையிடப்பட்டிருக்கின்றன. என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இலங்கையில் சிறுவர்களை பாதுகாக்க சட்டங்கள் உள்ளன. அவை கடுமையாகவும் உள்ளன. அதற்காக அமைச்சுகளும் திணைக்களங்களும் அதிகார சபைகளும் நிறுவப்பட்டுள்ளன. மாவட்டங்கள் தோறும் விசேட அதிகாரிகள் பட்டாளமே உள்ளது. அவ்வாறு இருந்தும் சிறுவர்களை ஏன் எங்களால் பாதுகாக்க முடியவில்லை.

சமூக விழிப்புணர்வு இல்லை என்பது தான் இதற்கான பிரதான காரணமாகும். அனைத்து சிறுவர்களுக்கும் உயிர் வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும் இபோதுமான கவனிப்பை பெறுவதற்கும், பாதுகாப்பான சூழலில் வளர்வதற்கும், கல்வியைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. அதனை சமூகம் தனது கடப்பாடாக தங்களது பொறுப்பாக ஏற்கும் மனநிலையை கொண்டு வர வேண்டும்.

துஷ்பிரயோகத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்கும், பாதிப்டைந்தவர்களுக்கான புனர்வாழ்வு அளித்து உதவுவதற்குமான பரிந்துரைகள்

1. சிறுவர்களுக்கு ஆபத்தான சூழலையும், சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்பவர்களின் இயல்புகளையும், நல்ல தொடுகை, கெட்ட தொடுகை பற்றிய அறிவையும் ஊட்டல் வேண்டும்.

2. சிறுவர்கள் துஷ்பிரயோகத்தினால் இலகுவில் பாதிக்கப்படும் தன்மையைக் குறைப்பதற்கும், ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்துவதற்கும் தேவையான திறன்களையும், பண்புகளையும் அவர்களில் விருத்தி செய்வதும் அவசியமாகும்.

3. சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக செயற்படுவதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மனவடுக்களைக் குறைப்தற்குமான பயிற்சிகளையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், சுகாதார உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் நடாத்தல் வேண்டும்.

4. சிறுவர்களைத் தனியாக வீடுகளில் விட்டுவிட்டுச் செல்லும்போது பாதுகாப்பான சூழலை உருவாக்கிவிட்டுச் செல்ல அறிவூட்ட வேண்டும்.

5. பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் மனவெழுச்சிசார் பிரச்சினைகளை சமாளிப்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்கும் பயிற்றப்பட்டவர்களை பிரதேசங்களில் உருவாக்கல்.

6. பாதிக்கப்பட்டவர்களைத்தற்பாதுகாப்புக்காக உளநல மருத்துவர் ஒருவரிடம் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் மூலம் ஏதேனும் உளப்பாதிப்புக்குள்ளானால் அவர்கள் உடனே அதற்கான சிகிச்சைகளைப் பெறுதல் வேண்டும். இது மேலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை விட்டும் தடுக்கும்.

7. சகல வசதிகளுமுடைய சிறுவர் இல்லங்களை அமைத்து உடலியல் தேவைகளை மாத்திரமல்லாமல் சிறுவர்களின் (6ஆம் பக்கம் பார்க்க..)



# இலங்கையில் தீவிரமடையும் இணையத்தள மோசடிகள்

## ▶ 300 க்கும் அதிகமானோர் ஒரு வாரத்தில் கைது
## ▶ நூற்றுக்கணக்கான கணினிகள் பிடிபட்டன

இலங்கையில் வெளிநாட்டவர்களால் நடத்தப்படும் இணையதள மோசடி குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலத்தில் இலங்கையின் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளில் 300 க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான மடிக் கணினிகள், கைத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இணைந்துகொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா இது தொடர்பான பல தகவல்களை வெளியிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், "நாங்கள் இங்கே ஒரு தனித்துவமான சூழ்நிலையை அனுபவித்தோம். ஸ்கேனிங் முகாம். இவை முகாம்களாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது இலங்கைக்கு ஒரு புதிய போக்கு. 2024ஆம் ஆண்டு தான் இந்த முகாமின் நிலை தெரியவந்தது.

இந்த முகாமில் என்ன நடக்கிறது என்றால், அவர்கள் ஒரு தனி இடத்தை தேர்வு செய்கிறார்கள், அவர்களுக்கு அறை வசதியுடன் கூடிய விசாலமான இடம் தேவை. அவர்கள் வெளியே செல்ல அனுமதி இல்லை. இலங்கையர்கள் மியான்மரில் சிக்கியுள்ளனர் என்றால் அதே நிலைதான் இங்கும் நிலவுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

இணையவழி மோடி தொடர்பில் சுமார் 300 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேலும், 500 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 300 கணினிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இணையவழி மோசடியை மேற்கூகொள்ளும் நபர்களுக்காக இடங்களை வழங்குபவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகூகள் தாக்கல் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இணையதளங்களை அடிப்படையாகக் கொண்ட மோசடிகளில் இலங்கையர்கள் சிக்கிக் கொள்ளல் அதிகரித்துள்ளது.

இலங்கையர்களை அவற்றில் சிக்க வைப்பதும் மோசடிக்காரர்களுக்கு இலகுவாகவுள்ளது. எனவே தான் இங்கு அவ்வாறான குற்றச்செயல்கள் அதிகளவில் இடம்பெறுவதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளதுடன் வெளிநாட்டவர்கசூளுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் போதும், ஹோட்டல்களில் அறைகளை வாடகைக்கு வழங்கும் போதும் உரிமையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கண்டியில் 140க்கும் அதிகமானோரும், பாணந்துறையில் 22க்கும் அதிகமானோரும்,

ராஜகிரியவில் 15 பேரும் என கடந்த சில தினங்களுக்குள் மாத்திரம் 200க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அது மாத்திரமின்றி 500க்கும் மேற்பட்ட கையடக்க தொலைபேசிகள், 200க்கும் மேற்பட்ட கனணிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவங்கள் தொடர்பில்

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இவ்வாறானவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் வீட்டு உரிமையாளர்களும் இவர்கூகளுக்கு உடந்தையாகவுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதாவது இவர்கள் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்தே தமது வீடுகளை வாடகைக்கு வழங்குகின்றனர். மிகவும் சூட்சுமமான முறையில் அவர்கள் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுகின்கூறனர். கண்டியில் 77 அறைகள் உள்ள ஒரு ஹோட்டலில் 47 அறைகளை வாடகைக்கு பெற்று அங்கு சகல வசதிகளுடனும் மோசடிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

எனவே ஹோட்டல் உரிமையாளர்களும் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். அவ்வாறில்லை எனில் யாரும் அறியாமல் கோடிக்கணக்கான பணத்தை இழக்க நேரிடும். இவர்கள் அனைவரும் சுற்றுலா வீசாவிலேயே வந்துள்ளனர். அவர்கள் இலங்கையை தெரிவு செய்வதற்காக சரியான காரணத்தை எம்மால் கூற முடியாது.

ஆனால் இந்த மோசடிக்காரர்களால் அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கு இலங்கையிலுள்ளவர்கள் விரை வாக பதிலளிக்கின்றனர்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557



## கல்முனை வலயம் இரண்டாம் இடம்! மாகாண கல்வி செயலாளர் பாராட்டு

(வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் வெளியான கபொத சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் கல்முனை வலயம் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்திருந்தது .

அதனைப் பாராட்டுமுகமாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. திசாநாயக்க பாராட்டு சான்று பத்திரத்தை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ். சஹுதுல் நஜீமிற்கு வழங்கி வைத்தார்.

அச்சமயம் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் சமுகமளித்திருந்தார்.

# View அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு செயலமர்வு




(எம் எப். நவாஸ், இஷட் ஏ. றஹ்மான்)

இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான ஏநைற அமைப்பின் பிராந்திய கண்காணிப்பு குழுவினர் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான தேர்தல் கண்காணிப்பு தொடர்பான அறிவூட்டும் செயலமர்வு நேற்று அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் ஏநைற அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சாஹிரா இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது.

இதில்உங்களுடைய வாக்கு நாட்டின்எதிர்காலமாகும் எனும் தொனிப் பொருளில் எநைற அமைப்பின் ஆலோசகரும் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான மஹிந்த தேசப்பிரிய அவர்களினால் தெளிவுரை வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்வில் வொய்ஸ் ஒப் ரைட் (ஏழளைஉந ழக சுபைாவ) அமைப்பின் பணிப்பாளர் அருள் நாயகம் தர்ஷிக்காவும் கலந்து கொண்டார்.

# அதிகரிக்கும்...

ஏனைய தேவைகளையும் அறிந்து செயற்படக்கூடிய பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

இப்பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுவதில் குறைந்தளவு சமூகப் பொருளாதார நிலைமைகளே அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றன. அதில், துஷ்பிரயோகம் பற்றிய அறிவீனம், பெற்றோரின் போதைப் பாவனை, குடும்ப வன்முறை, பெற்றோரின் வெளிநாட்டுப் பயணம், தவறான சகவாசம், தனிமை, தாய் தந்தை பிரிவு, அன்பு கிடையாமை, படிப்பறிவின்மை, பொருளாதாரச் சிக்கல்கள், சமூக வலைத்தளங்களினூடான தவறான நண்பர்களின் சகவாசம், இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தல் போன்றவற்றை சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்குப் பிரதான காரணங்களாக குறிப்பிட்டுக் காட்டலாம்.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதன் காரணமாக அவர்களில் கல்வி சீர்குலைதல், பாடசாலை இடைவிலகல், அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி பெருமளவு பாதிப்படைதல், சமூகத்தால் இழிவுபடுத்தப்படல், குற்றவாளியாக முத்திரை குத்தப்படல், முறையற்ற அல்லது தவறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடப் பழகுதல், உளப் பிரச்சினைகளுக்கு உள்ளாதல், பிள்ளை பெரியவனான பின்னர் பாலியல் சார்ந்த செயல்களில் ஈடுபடல், பாலியல் நடத்தை தொடர்பான பயமும், தாழ்வு மனப்பான்மையும் ஏற்படல், திருமணம் தொடர்பான அச்சம் ஏற்படல், பாலியல் நோய்களுக்கு ஆளாகுதல் போன்ற பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

பாதிப்டைந்த சிறுவர்களுக்கான உடலியல் மற்றும் உளவியல்சார் தொந்தரவுகளைத் தவிர்த்து முன்னேற்றமடையச் செய்யக்கூடிய ஆதரவுச் சேவைகள் இன்று பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கக்கூடியதாக உள்ளன. மேலும், பாதிப்டைந்த சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாலும், நீடித்த சட்ட தீர்ப்புக்களாலும், குறித்த பிரச்சிரனகள் அதிகளவு மீடியாக்களில் விளம்பரப்படுத்தப்படுவதாலும், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆராய்வதற்கும், முகாமை செய்வதற்குமான நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மையாலும் மென்மேலும் சிறுவர்கள் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்களாவர். பாடசாலை ஆசிரியர்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் முக்கிய பொறுப்புள்ளது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வயதுப் பிரிவுக்கேற்ற வகையில் பாலியல் கல்வி போதிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் பங்களிப்பு வழங்க வேண்டியது மிக அவசியமாகும்.

நாட்டில் எவ்வளவு சிறுவர் துஷ்பிரயோகம் நடந்திருப்பினும் மீண்டும் மீண்டும் அதே நடைபெறுவது வழமை ஆகிவிட்டது. கடந்த பத்து ஆண்டுகள் நாட்டின் சகல மாவட்டங்களிலும் பதிவாகியுள்ள சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான புள்ளி விபரங்களை அவதானிக்கும் போது மேல் மாகாணம் உயர் மட்டத்திலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கீழ் மாட்டத்திலும் காணப்படுகின்றன.

இந்த சமூக முறைக்கேட்டை நமது சமுதாயத்திலிருந்து முழுமையாக ஒழிக்க நாம் கங்கணம் கட்டி செயலாற்ற வேண்டும். இந்த உலகில் பிறந்த அனைவரதும் பிரதான கடமை சிறுவர்களை பாதுகாப்பதாகும். அந்த வகையில் சிறுவர்களை உடல்,உள வீதியில் பாதுகாப்பிற்குற்படுத்தி அவர்களது வாழ்வை சீரழிக்காது அவர்களது எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.






# தென்கிழக்கு பல்கலையில் விஞ்ஞானம் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு மாநாடு!





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 4வது சர்வதேச ஆய்வு மாநாடு தொழில் நுட்பவியல் பீட பிரதான கேட்போர் கூடத்தில் 2024.10.16 ஆம் திகதி மாநாட்டின் தலைவரும் பதில் உபவேந்தரும் பீடாதிபதியுமான கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

ஆய்வு மாநாட்டை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழினுட்பவியல் பீடம் ஏற்பாடு செய்திருந்தது. இதனுடன் ஞடுயுயுளு உம் ஒன்றிணைந்திருந்தது.

மாநாட்டின் இணைப்பாளரும் பயோ சிஸ்டம் டெக்னாலஜியின் துறைத்தலைவருமான கலாநிதி முனீப் எம். முஸ்தபாவின் வழிகாட்டலிலும் ஐஊளுவு 2024 செயலாளர் ஏ.ஆர். பாத்திமா ஷபானாவின் நெறிப்படுத்தலிலும், “நிலையான எதிர்காலத்திற்கான நவீன தொழில்நுட்பங்கள் மூலம் புதுமையான எல்லைகளை ஆராய்தல்” (“நுஓிடழசiபெ ஐnழெஎயவiஎந உழசnநசள வூசழரபா ஆழனநசn வுநஉhழெடழபநைள கழச ய ளுரளவயiயெடிடந குரவரசந”) எனும் தொனிப்பொருளில் குறித்த மாநாடு இடம்பெற்றது.

மாநாட்டுக்கு விசேட பேச்சாளர்களாக பிரித்தானியாவின் உரனனநசளகநைடன பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டிலாந்தி அமரதுங்க மற்றும் தாய்லாந்தின் யுளயைn ஐளெவவைரவந ழக வுநஉhழெடழபல யின் உதவி பேராசிரியர் ஊாயமடயஅ ளுடைியளரறயஉொயை ஆகியோர் நிகழ்நிலையூடாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஐஊளுவு2024 ஆய்வு மாநாட்டுக்கு 81 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 52 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, விவாதிக்கப்பட்டன. நிகழ்வின் வுநஉhனைையட ளுநளளழைn ல் நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்வுக்கு லைக்கா ஞானம் பவுண்டேஷன் மற்றும் ஆலுமுறுகு நுனரஉயவழைn யுனை என்பன முழு அனுசரணை வழங்கியிருந்தன.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி ஏ.எம்.எம். முஸ்தபா, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட பீடாதிபதி அஷ்ஷெய்க் எம்.எச்.ஏ. முனாஸ், நூலகர் எம்.எம். றிபாவுடீன், பேராசிரியர் எம்.எச். தௌபீக், லைக்கா ஞானம் பௌண்டேசன் அம்பாறை இணைப்பாளர் அகிலன் ஆலுமுறுகு நுனரஉயவழைn யுனை இன் பிரதிநிதிகள் திணைக்களங்களின் தலைவர்கள் விரிவுரையாளர்கள், நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தோர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான ‘மருதம்’ நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# அக்கரைப்பற்றில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு










(எம்.ஏ.றமீஸ்)

தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்லூரி வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஐ.எம்.ஹனீபா அதிதியாக கலந்து கொண்டார்.

நூலகப் பொறுப்பாளர் ஏ.எல்.றினோஸின் நெறிப்படுத்தலின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வின் போது பிரதி அதிபர் லெப்டினன் என்.எம்.முகம்மட் ஸாலிஹ், உதவி அதிபர் எம்.எம்.எஸ்.றபா உள்ளிட்ட ஆசிரியர்கள், நூலக உதவியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் பெருந்தொகையான மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. இவ்விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலை வளாகத்தில் இருந்து ஆரம்பித்து அக்கரைப்பற்று நகரின் பல்வேறு பகுதிகளின் வீதிகள் வழியாக சென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது வாசிப்பின் அவசியம் குறித்த துண்டுப்பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் போன்றன மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. வாசிப்பின் முக்கியத்தும் அடங்கிய பதாதைகளை மாணவர்கள் ஏந்தியவாறு வாசிப்பினை தூண்டும் கோசங்களையும் எழுப்பிச் சென்றனர்.

இம்மாணவர்கள் அக்கரைப்பற்று மாநகர நூலகத்திற்கும் சென்று நூலக நடவடிக்கைகள் தொடர்பிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவை நிலையமான பிறை எப்.எம் வானொலி நிலையத்தில் இடம் பெற்ற வாசிப்பு தொடர்பான நிகழ்ச்சியிலும் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2024 இல் வெளியிடப்பெற்றது.